ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30,சனாதிபதிமாவத்தை,கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2020.07.13 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2020 மே

### முக்கிய பண்புகள்

| | 2020 | 2020 சன-மே |
|---|---|---|
| வர்த்தகப் பற்றாக்குறை | ஐ.அ.டொ. 407 மில்.<br>2019 மே: ஐ.அ.டொ 823 மில | ஐ.அ.டொ. 3,100 மில்<br>2019 சன-மே: ஐ.அ.டொ. 3,281 மில். |
| வணிகப்பொருள் ஏற்றுமதி | ஐ.அ.டொ. 587 மில்<br>2019 மே: ஐ.அ.டொ 961 மில<br>-39.0% ஆண்டிற்கு ஆண்டு | ஐ.அ.டொ. 3,519 மில்<br>2019 சன-மே: ஐ.அ.டொ. 4,915 மில.<br>-28.4% ஆண்டிற்கு ஆண்டு |
| வணிகப்பொருள் இறக்குமதி | ஐ.அ.டொ. 994 மில்<br>2019 மே: ஐ.அ.டொ 1,784 மில<br>-44.3% ஆண்டிற்கு ஆண்டு | ஐ.அ.டொ. 6,619 மில்<br>2019 சன-மே: ஐ.அ.டொ. 8,196 மில.<br>-19.2% ஆண்டிற்கு ஆண்டு |

**சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்**
2020 மே: பூச்சியம்
(-100.0% ஆண்டிற்கு ஆண்டு)
2020 சன-மே: ஐ.அ.டொ. 956 மில்
(-46.3% ஆண்டிற்கு ஆண்டு)

**தொழிலாளர் பணவனுப்பல்கள்**
2020 மே: ஐ.அ.டொ. 432 மில்
(-23.2% ஆண்டிற்கு ஆண்டு)
2020 சன-மே: ஐ.அ.டொ. 2,4076 மில்
(-11.9% ஆண்டிற்கு ஆண்டு)

| கொபஎ (இரண்டாந்தரச் சந்தை – தேறிய) | அரச பிணையங்கள் (தேறிய) | மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் | செலாவணி வீதம் (ஐ.அ.டொ. ஒன்றுக்கு ரூ.) |
|---|---|---|---|
| மே 2020: ஐ.அ.டொ -36 மில்<br>சன-மே 2020: ஐ.அ.டொ -65 மில் | மே 2020: ஐ.அ.டொ. -3 மில்<br>சன-மே: ஐ.அ.டொ. -454 மில் | மே இறுதியில் 2020– ஐ.அ.டொ. 6.5 பில்<br>(4.2 மாத இறக்குமதிகள்) | திசெ இறுதியில் 2019 – 181.6340<br>மே இறுதியில் 2020 – 186.2865 |













இலங்கை மத்திய வங்கி, வணிகப்பொருள் வர்த்தகச் செயலாற்றம் தொடர்பான மேலதிகத் தகவல்களைக் கொண்ட “மாதாந்த வர்த்தக செய்தித்திரட்டு” ஒன்றினை வெளியிட்டு வருகிறது. இதனைப் புள்ளிவிபரங்கள், பொருளாதாரக் குறிகாட்டிகள், மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டின் கீழ், இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் பார்வையிட முடியும்.
https://www.cbsl.gov.lk/en/monthly-trade-bulletin

## பொதுநோக்கு

2020 மேயின் இரண்டாம் வாரத்தில் பெரும்பாலான முடக்க வழிமுறைகள் நீக்கப்பட்டதன் காரணமாக வெளிநாட்டுத் துறை உறுதியடைந்தமைக்கான அறிகுறிகளைக் காட்டியது. அத்தியாவசியமல்லா இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் வணிகப்பொருள் இறக்குமதிகளில் குறிப்பிடத்தக்க குறைப்பினை ஏற்படுத்தியதன் காரணமாக மேயில் அதன் தாக்கம் அவதானிக்கப்பட்டது. அதேவேளை, ஏப்பிறலில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்திருந்த வணிகப்பொருள் ஏற்றுமதிகள் இம்மாத காலப்பகுதியில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்கக் கூடுதலாக எழுச்சியுற்றது. 2019இன் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 மேயில் தொழிலாளர் பணவனுப்பல்கள் குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவாக இருந்த போதும் 2020 ஏப்பிறலில் பதிவுசெய்யப்பட்ட கடுமையான குறைந்த மட்டத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. நிதியியல் பாய்ச்சல்களைப் பொறுத்தவரையில் அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகளின் மொத்த வெளிப்படுத்துகை கணிசமானளவிற்குக் குறைவாக இருந்தமைக்கு மே மாதத்தில் அரச பிணையங்களில் சிறிதளவு வெளிப்பாய்ச்சல்கள் பதிவுசெய்யப்பட்டமையே காரணமாகும். 2020 மே நடுப்பகுதியில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் வர்த்தகம் மீண்டும் தொடங்கப்பட்டமையின் காரணமாக வெளிநாட்டு முதலீட்டில் சில வெளிப்பாய்ச்சல்கள் காணப்பட்டன. மேம்பட்ட வர்த்தகப் பற்றாக்குறையின் முக்கிய உதவியுடன் இலங்கை ரூபா உறுதியடைந்து மே மாத காலப்பகுதியில் 3.5 சதவீதம் கொண்ட உயர்வினைப் பதிவுசெய்தது.

### அட்டவணை 1: வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் சுருக்கம்(அ)

| வகை | மே 2019 ஐ.அ.டொ மில் | மே 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) | சன - மே 2019 ஐ.அ.டொ மில் | சன - மே 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 961 | 587 | -39.0 | 4,915 | 3,519 | -28.4 |
| இறக்குமதிகள் | 1,784 | 994 | -44.3 | 8,196 | 6,619 | -19.2 |
| வர்த்தகமீதி (தேறிய) | -823 | -407 | | -3,281 | -3,100 | |
| சுற்றுலாவிலிருந்தானவருவாய்கள் | 71 (ஆ) | - | -100.0 | 1,782 (ஆ) | 956 (இ) | -46.3 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 562 | 432 | -23.2 | 2,733 | 2,407 | -11.9 |
| கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கானஉட்பாய்ச்சல் (தேறிய)(ஈ) | 4 | -36 | | -20 | -64 | |
| அரசாங்கத்திற்கானஉட்பாய்ச்சல் (மொத்தம்) | 141 | 111 | | 3,380 | 1,072 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 60 | 2 | | 327 | 86 | |
| நீண்ட காலக் கடன்கள் | 81 | 109 | | 653 | 985 | |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | - | - | | 2,400 | - | |
| வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (உ) | | | | 255 | 192 | |
| திரண்ட நிலுவை | | | | -127 | -797 | |

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை

(அ) தற்காலிகமானது

(ஆ) 2019 இற்கான சராசரி தங்கும் காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவின மதிப்பீடுகள் தொடர்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளின் அடிப்படையில் திருத்தப்பட்டது

(இ) இந்த தற்காலிக மதிப்பீடுகள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2020 அளவீட்டு மதிப்பீடுகளின் வெளியீட்டின் பின்னர் திருத்தப்படலாம்

(ஈ) இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது

(உ) இலங்கை முதலீட்டுச் சபையினால் பதிவுசெய்யப்பட்டவாறான நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்களையும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய நேரடி முதலீடுகளையும் உள்ளடக்குகிறது

## வர்த்தக மீதி மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

- இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியை ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி விஞ்சிக் காணப்பட்டமையினால், **வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை** 2019 மேயின் ஐ.அ.டொலர் 823 மில்லியனிலிருந்து 2020 மேயில் ஐ.அ.டொலர் 407 மில்லியனுக்கு ஐ.அ.டொலர் 416 மில்லியனால் குறுக்கமடைந்தது. அத்துடன், ஒன்றுசேர்ந்த அடிப்படையில் 2020இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை, 2019இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 3,281 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 3,100 மில்லியனுக்கு ஐ.அ.டொலர் 180 மில்லியனால் குறுக்கமடைந்தது. 2020இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட வீழச்சிக்கான முக்கிய பங்களிப்புக் காரணிகள் வரைபடம் 1இல் காட்டப்பட்டுள்ளன.

- அதேவேளை, **வர்த்தக மாற்று விகிதம்** அதாவது இறக்குமதி விலைகளுக்கான ஏற்றுமதி விலைகளின் விகிதம் 2020 மேயில் (ஆண்டிற்கு ஆண்டு) 20.6 சதவீதத்தினால் மேம்பட்டமைக்கு ஏற்றுமதி விலைகள் அதிகரிப்பினைக் கொண்டிருந்த வேளையில் இறக்குமதி விலைகள் வீழ்ச்சியைக் கொண்டிருந்தமையே காரணமாகும்.

**வரைபடம்: 1 : 2020 சனவரி – மேயில் வர்த்தகப் பற்றாக்குறையின் அதிகரிப்பிற்குப் பங்களித்த முக்கிய காரணிகள் (ஐ.அ.டொ. மில்லியன்)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2: மாதாந்த வர்த்தகப் பற்றாக்குறை (2019 – 2020)**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 3: வர்த்தக மாற்று விகிதம் (2019 - 2020)**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றும்

- **வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான** வருவாய்கள் 2019 மேயில் ஐ.அ.டொலர் 587 மில்லியனுக்கு மீளஎழுச்சியுற்றமைக்கு முடக்க வழிமுறைகள் தளர்த்தப்பட்டமை, உள்நாட்டு மற்றும் உலகளாவிய நிரம்பல் நிலைமைகள் மீட்சியடைந்தமை மற்றும் கேள்விச் சங்கிலியில் ஏற்பட்ட ஓரளவு முன்னேற்றம் என்பனவற்றினைத் தொடர்ந்து ஏற்றுமதித் துறை நடவடிக்கைகள் படிப்படியாக மீள ஆரம்பித்தமையே காரணமாகும். 2020 மேயில் வருவாய்கள் 2020 ஏப்பிறலில் பதிவுசெய்யப்பட்ட பெறுமதியினை விட இருமடங்கிற்கும் கூடுதலாகக் காணப்பட்டன. எனினும், 2019 மேயுடன் ஒப்பிடுகையில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 39.0 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்து காணப்பட்டன.

- மூன்று முக்கிய ஏற்றுமதித் துறைகளிலிருந்த வருவய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தமைக்கு, கைத்தொழில் ஏற்றுமதிகள் மிகக் கூடியளவிற்கு வீழ்ச்சியடைந்தமையும் வேளாண்மை மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகள் மெதுவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தமையும் காரணங்களாக அமைந்தன. புடவைகள் மற்றும் ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், பெற்றோலிய உற்பத்திகள், உணவு, குடிபானம் மற்றும் புகையிலை போன்ற முக்கிய ஏற்றுமதிகள் 2020 மேயில் வீழ்ச்சியடைந்த போதும் இத்துறைகளிலிருந்தான வருவாய்கள் 2019இல் அறிவிக்கப்பட்ட மாதாந்தச் சராசரிப் பெறுமதிகளின் ஏறத்தாழ அரைப்பங்கினை அறவிட்டுக் கொண்டன. எனினும், முகக்கவசம், பாதுகாப்பு உடைகள், அறுவைச் சிகிச்சைக்கான கையுறைகள் போன்ற தனியாள் பாதுகாப்புச் சாதனங்களுக்கான உயர்ந்த கேள்வியின் காரணமாக ஏனைய தயாரிக்கப்பட்ட பொருட்கள் (புடகைள் மற்றும் ஆடைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டவை) அறுவைச் சிகிச்சை மற்றும் ஏனைய கையுறைகள் (இறப்பர் உற்பத்திகளின் வகைப்படுத்தப்பட்டவை) என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. அதேவேளை, வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு பன்னாட்டுச் சந்தையில் தேயிலைக்கான உயர்ந்த சராசரி ஏற்றுமதி விலைகள் பதிவுசெய்யப்பட்ட போதும் உள்நாட்டு உற்பத்திகள் குறைவடைந்தமையின் காரணமாக தேயிலை ஏற்றுமதியின் அளவு குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு உள்ளீடு அல்லாத உற்பத்திகளின் ஏற்றுமதிகள் அதிகரித்த போதும் தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் குறைந்த அளவுகள் காரணமாக அமைந்தன. 2020 மேயில், சிறுவேளாண்மை உற்பத்திகளின் ஏற்றுமதிகள் மேம்பட்டமைக்கு பாக்கின் ஏற்றுமதியே முக்கிய காரணமாக அமைந்தது.

- 2020 மேயில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 46.8 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் அலகுப் பெறுமதிச் சுட்டெண் 14.8 சதவீதத்தினால் மேம்பட்டு 2019 மேயுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி குறைந்த அளவுகளினாலேயே முழுமையாக ஏற்பட்டது என்பதனை எடுத்துக்காட்டியது.

**வரைபடம் 4: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றும்**




**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 5: ஏற்றுமதி அளவுச் சுட்டெண்**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் (அ)

| வகை | மே 2019 ஐ.அ.டொ மில் | மே 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) | சன-மே 2019 ஐ.அ.டொ மில் | சன-மே 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **741.3** | **401.0** | **-45.9** | **3,853.2** | **2,695.8** | **-30.0** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 37.2 | 29.3 | -21.3 | 202.3 | 156.1 | -22.8 |
| விலங்குத்தீன் | 11.0 | 8.2 | -25.3 | 51.4 | 37.9 | -26.1 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 424.2 | 220.1 | -48.1 | 2,256.0 | 1,540.2 | -31.7 |
| இதில் ஆடைகள் | 391.6 | 189.1 | -51.7 | 2,098.5 | 1,411.2 | -32.8 |
| புடவைகள் | 23.3 | 15.0 | -35.5 | 114.6 | 85.1 | -25.8 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 9.4 | 16.0 | 69.9 | 42.9 | 44.0 | 2.5 |
| இறப்பர் உற்பத்திகள் | 77.2 | 49.4 | -36.1 | 363.1 | 269.7 | -25.7 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 24.8 | 6.8 | -72.4 | 131.1 | 61.6 | -53.0 |
| பொறி மற்றும் எந்திரவியல் சாதனங்கள் | 38.1 | 20.8 | -45.3 | 172.2 | 116.3 | -32.5 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 7.0 | 4.1 | -41.9 | 39.7 | 23.2 | -41.5 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 39.5 | 10.6 | -73.1 | 206.4 | 202.8 | -1.8 |
| இரசாயன உற்பத்திகள் | 15.3 | 13.9 | -9.4 | 72.4 | 59.3 | -18.1 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 11.0 | 7.1 | -35.5 | 59.9 | 36.4 | -39.3 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 1.9 | 1.4 | -26.2 | 21.4 | 13.1 | -38.6 |
| தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 8.4 | 2.6 | -68.8 | 49.2 | 20.2 | -58.8 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 5.8 | 3.5 | -39.8 | 30.3 | 19.8 | -34.7 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 17.5 | 8.1 | -53.8 | 76.9 | 45.8 | -40.4 |
| மட்பாண்டஉற்பத்திகள் | 2.1 | 1.2 | -41.7 | 11.3 | 7.6 | -32.1 |
| ஏனையவை | 20.2 | 13.8 | -31.7 | 109.7 | 85.6 | -21.9 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **215.9** | **183.0** | **-15.2** | **1,040.6** | **809.8** | **-22.2** |
| தேயிலை | 125.6 | 108.3 | -13.8 | 571.8 | 456.7 | -20.1 |
| இறப்பர் | 2.4 | 1.8 | -24.0 | 13.3 | 10.6 | -20.3 |
| தெங்கு | 32.2 | 27.9 | -13.6 | 143.9 | 112.6 | -21.8 |
| வாசனைத்திரவியங்கள் | 22.6 | 19.3 | -14.9 | 119.1 | 82.4 | -30.8 |
| காய்கறிகள் | 2.8 | 1.9 | -33.7 | 13.6 | 9.9 | -27.2 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.6 | 2.2 | -15.1 | 13.0 | 8.2 | -37.0 |
| சிறுவேளாண்மை உற்பத்திகள் | 9.1 | 10.2 | 11.9 | 43.7 | 54.7 | 25.1 |
| கடலுணவு | 18.6 | 11.5 | -38.0 | 122.2 | 74.8 | -38.8 |
| **3. கனிம ஏற்றுமதிகள்** | **2.6** | **2.2** | **-12.2** | **13.9** | **8.1** | **-41.7** |
| **4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **1.3** | **0.5** | **-63.7** | **7.6** | **4.9** | **-35.4** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **961.0** | **586.7** | **-39.0** | **4,915.3** | **3,518.7** | **-28.4** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை,இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்,இலங்கை மத்திய வங்கி

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

- 2020 மேயில் **வணிகப்பொருள் இறக்குமதிகள்** மீதானம் செலவினம், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், ஐ.அ.டொலர் 994 மில்லியனுக்கு 44.3 மில்லியனால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமையின் மூலம் 2010 மாச்சிற்குப் பின்னர் முதற்றடைவையாக ஐ.அ.டொலர் 1 பில்லியனுக்கும் குறைவான மாதாந்தச் செலவினம் பதிவுசெய்யப்பட்டது. அனைத்து முக்கிய இறக்குமதித் துறைகளான நுகர்வு, இடைநிலை மற்றும் முதலீட்டுப்பொருட்களின் மீதான செலவினம் 2020 மேயில் வீழ்ச்சியடைந்தது. இக்குறைப்பிற்கு தொற்றினால் உருவாக்கப்பட்ட மோசமான தாக்கங்களிலிருந்து செலாவணி வீதம் மற்றும் பன்னாட்டு ஒதுக்குகள் மீதான அழுத்தங்களைக் குறைக்கும் நோக்குடன் தெரிவுசெய்யப்பட்ட பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்காக 2020 மாச்சிலிருந்து அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் எடுக்கப்பட்ட வழிமுறைகளே முக்கிய காரணங்களாக அமைந்தன.

- எரிபொருள் இறக்குமதிகள் மீதான குறைந்த செலவினத்தின் தூண்டுதலினால் இடைநிலைப்பொருட்கள் மீதான செலவினம் பெருமளவிற்கு வீழ்ச்சியைடந்ததுடன் அதனைத் தொடர்ந்து முதலீட்டுப்பொருட்கள் மற்றும் நுகர்வுப்பொருட்களின் வீழ்ச்சிகள் காணப்பட்டன. எரிபொருள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு வகைகூறிய காரணிகள் பன்னாட்டுச் சந்தையில் மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் என்பனவற்றின் இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் எரிபொருளுக்கான உள்நாட்டுக் கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக இறக்குமதிகளில் ஏற்பட்ட குறைப்பு என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. 2020 மேயில் மசகெண்ணெயின் சராசரி இறக்குமதி விலை ஓராண்டிற்கு முன்னைய பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர் 74.76 உடன் ஒப்பிடுகையில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 25.44 ஆகக் காணப்பட்டது. உலகளாவிய வழங்கல் சங்கிலியில் ஏற்பட்ட இடையூறுகள் அதேபோன்று எதிர்வரும் காலத்தில் ஆடை ஏற்றுமதிகளுக்கான குறைந்த கேள்வி வாய்ப்புக்களுக்கிடையில் 2020 மேயில் புடவை மற்றும் புடவைப்பொருட்கள் இறக்குமதி மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. அடிப்படை உலோகங்கள், பிளாத்திக்கு மற்றும் அவற்றின் பொருட்கள் போன்ற ஏனைய இடைநிலைப்பொருட்கள், முதலீட்டுப்பொருட்களின் அனைத்து துணைவகைகள் மற்றும் உணவல்லா நுகர்வுப்பொருட்கள் என்பன மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கு 2020 மாச்சிலிருந்து அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் எடுக்கப்பட்ட முக்கிய வழிமுறைகளும் கொவிட்-19 தொற்றிலிருந்து உலகளாவிய நிரம்பல் சங்கிலிகளுக்கு ஏற்பட்ட இடையூறுகளும் முக்கிய காரணமாக அமைந்தன. உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் மெதுவான வேகத்தில் வீழ்ச்சியடைந்த போதும் கடலுணவு, சீனி, குடிபானங்கள் மற்றும் பழவர்க்கங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி, காய்கறிகள் (முக்கியமாக பருப்பு வகை மற்றும் சின்ன வெங்காயம்) வாசனைத்திரவியங்கள் (முக்கியமாக மிளகாய்) மற்றும் பாற்பண்ணைப் பொருட்கள் (முக்கியமாக பால்மா) போன்ற அத்தியாவசியப்பொருட்களின் உயர்ந்த இறக்குமதிகளை எதிரீடு செய்தன.

- 2020 மேயில் இறக்குமதி அளவுச் சுட்டெண்ணும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்ணும் முறையே 41.6 சதவீதத்தினாலும் 4.8 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்து, இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு 2019 மேயுடன் ஒப்பிடுகையில் குறைந்த அளவுகள் மற்றும் குறைந்த விலைகள் இரண்டும் காரணங்களாக அமைந்தமையினை எடுத்துக்காட்டின.

வரைபடம் 6: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்




மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 7: இறக்குமதி அளவுச் சுட்டெண்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 3: வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம்(அ)

| வகை | மே 2019 ஐ.அ.டொ மில் | மே 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) | சன-மே 2019 ஐ.அ.டொ மில் | சன-மே 2020 ஐ.அ.டொ மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **332.5** | **264.4** | **-20.5** | **1,552.9** | **1,533.0** | **-1.3** |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 134.8 | 122.1 | -9.4 | 592.3 | 685.4 | 15.7 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 2.4 | 1.8 | -22.6 | 14.2 | 15.7 | 10.7 |
| பாற்பண்ணை உற்பத்திகள் | 30.3 | 36.0 | 18.7 | 134.2 | 160.1 | 19.3 |
| காய்கறிகள் | 25.5 | 30.3 | 18.8 | 118.1 | 175.9 | 49.0 |
| கடலுணவு | 25.9 | 19.5 | -24.5 | 92.2 | 84.9 | -7.9 |
| சீனி மற்றும் இனிப்பு வகைகள் | 21.0 | 15.1 | -27.9 | 85.1 | 103.5 | 21.6 |
| வாசனைத்திரவியங்கள் | 7.6 | 9.6 | 25.7 | 44.1 | 59.8 | 35.5 |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 22.2 | 9.8 | -55.9 | 104.4 | 85.6 | -18.1 |
| உணவல்லா நுகர்வுப்பொருட்கள் | 197.7 | 142.3 | -28.0 | 960.7 | 847.6 | -11.8 |
| தனியாள் ஊர்திகள் | 58.7 | 47.5 | -19.1 | 276.0 | 264.2 | -4.3 |
| மருந்து மற்றும் மருந்தாக்கற்பொருட்கள் | 49.2 | 49.0 | -0.4 | 210.8 | 213.8 | 1.4 |
| வீட்டு உபயோகப்பொருட்கள் | 13.6 | 10.2 | -25.2 | 85.3 | 76.7 | -10.1 |
| ஆடைகள் மற்றும் அதன் துணைப்பொருட்கள் | 20.9 | 8.1 | -60.9 | 115.8 | 93.5 | -19.3 |
| தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் | 16.7 | 9.0 | -46.2 | 100.9 | 72.0 | -28.6 |
| வீட்டுச்சாதனங்கள் மற்றும் தளபாடப்பொருட்கள் | 14.4 | 8.9 | -38.1 | 63.1 | 57.2 | -9.3 |
| ஏனைய உணவல்லா நுகரக்கூடியவைகள் | 24.2 | 9.6 | -60.5 | 108.7 | 70.2 | -35.4 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **1,047.0** | **486.3** | **-53.6** | **4,703.8** | **3,602.0** | **-23.4** |
| எரிபொருள் | 402.8 | 62.9 | -84.4 | 1,716.4 | 1,133.0 | -34.0 |
| இதில் மசகெண்ணெய் | 105.6 | 15.4 | -85.4 | 398.8 | 224.6 | -43.7 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 294.1 | 47.5 | -83.9 | 1,192.5 | 782.0 | -34.4 |
| நிலக்கரி | 3.1 | 0.0 | -99.9 | 125.2 | 126.3 | 0.9 |
| வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் | 16.6 | 5.1 | -69.3 | 81.2 | 32.3 | -60.3 |
| புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் | 260.6 | 121.0 | -53.6 | 1,168.2 | 889.9 | -23.8 |
| தாள், தாள் அட்டைகள் மற்றும் அதன் பொருட்கள் | 43.1 | 29.2 | -32.4 | 179.7 | 149.2 | -17.0 |
| வேளாண்மை உள்ளீடுகள் | 18.8 | 16.7 | -11.3 | 80.6 | 86.0 | 6.7 |
| கோதுமை மற்றும் சோளம் | 23.9 | 39.8 | 66.8 | 110.7 | 128.7 | 16.3 |
| அடிப்படை உலோகங்கள் | 44.0 | 20.8 | -52.6 | 216.7 | 157.7 | -27.2 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 53.7 | 31.5 | -41.4 | 244.4 | 199.4 | -18.4 |
| இரசாயன உற்பத்திகள் | 76.3 | 60.5 | -20.7 | 350.1 | 316.0 | -9.8 |
| வளமாக்கி | 10.6 | 29.8 | 180.3 | 85.2 | 84.8 | -0.5 |
| இறப்பர் மற்றும் அதன் பொருட்கள் | 23.6 | 15.9 | -32.6 | 92.5 | 96.5 | 4.3 |
| கனிம உற்பத்திகள் | 13.2 | 7.7 | (41.8) | 98.7 | 60.1 | (39.1) |
| ஏனைய இடைநிலைப்பொருட்கள் | 59.7 | 45.4 | -24.0 | 279.4 | 268.5 | -3.9 |
| **3. முதலீட்டுப்பொருட்கள்** | **403.7** | **240.9** | **-40.3** | **1,936.6** | **1,474.3** | **-23.9** |
| பொறி மற்றும் சாதனம் | 206.8 | 158.1 | -23.6 | 1,055.6 | 843.6 | -20.1 |
| கட்டடப்பொருட்கள் | 149.8 | 57.8 | -61.4 | 626.8 | 417.2 | -33.4 |
| போக்குவரத்துச் சாதனம் | 46.4 | 24.8 | -46.5 | 251.3 | 212.3 | -15.5 |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | 0.7 | 0.1 | -80.0 | 2.9 | 1.2 | -59.3 |
| **மொத்த இறக்குமதிகள்** | **0.4** | **2.2** | **443.4** | **2.8** | **9.9** | **247.4** |
| **எரிபொருள் அல்லா இறக்குமதிகள்** | **1,783.7** | **993.8** | **-44.3** | **8,196.2** | **6,619.1** | **-19.2** |

(அ) தற்காலிகமானவை

**மூலங்கள்:** இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி

## நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்

- கொவிட்-19 பரவலின் காரணமாக 2020 மார்ச் நடுப்பகுதியிலிருந்து இலங்கைக்கான அனைத்துப் பயணிகளின் விமானப் பயணங்களும் கப்பல் பயணங்களும் இடைநிறுத்தப்பட்டமையின் காரணமாக 2020 மேயில் **சுற்றுலாப் பயணிகளின் வருகைகள்** எதுவும் பதிவுசெய்யப்படாமையினால் 2020இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் ஒன்றுசேர்ந்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2019இல் தொடர்பான காலப்பகுதியின் பதிவுசெய்யப்பட்ட 945,377 வருகைகளுடன் ஒப்பிடுகையில் 507,311 ஆகத் தொடர்ந்தும் காணப்பட்டது.

- சுற்றுலாப் பயணிகளின் வருகைகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்ட **சுற்றுலாவிலிருந்தான** ஒன்றுசேர்ந்த **வருவாய்கள்** 2020இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 956 மில்லியனாக விளங்கி 2019இன் தொடர்பான காலப்பகுதியிலிருந்து 46.3 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

- அதேவேளை, 2020 மேயில் **தொழிலாளர் பணவனுப்பல்கள்** ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 432 மில்லியனுக்கு, 23.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன2020இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் . ஒன்றுசேர்ந்த அடிப்படையில், தொழிலாளர் பணவனுப்பல்கள் 2019 தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2,407 மில்லியனுக்கு 11.9 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.

**வரைபடம் 8: சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து நாடுகள்**




மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 9: சுற்றுலா மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




மூலங்கள்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை,
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்,
இலங்கை மத்திய வங்கி

## நிதியியல் பாய்ச்சல்கள்

- 2020 மேயில், ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட **அரச பிணையங்கள்** சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 3 மில்லியன் கொண்ட வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ச்சல் பதிவுசெய்யப்பட்டமையின் மூலம் 2020இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 454 மில்லியன் கொண்ட ஒன்றுசேர்ந்த தேறிய வெளிப்பாய்ச்சலைத் தோற்றுவித்தது. அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகளின் மொத்த வெளிநின்ற வெளிப்படுத்துகை 2020 மே இறுதியில் ஐ.அ.டொலர் 126 மில்லியனாக அமைந்து குறிப்பிடத்தக்களவிற்கு குறைவாகக் காணப்பட்டன.

- கொவிட்-19 தொற்றின் காரணமாக மூடப்பட்ட கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் வர்த்தகப்படுத்தல்கள் 2020 மே 11ஆம் நாளிலிருந்து மீள ஆரம்பிக்கப்பட்டமையினைத் தொடர்ந்து 2020 மேயில் (2020 மேயில் முதலாந்தரச் சந்தை உட்பாய்ச்சல்கள் எதுவும் பதிவுசெய்யப்படவில்லை) கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் இரண்டாந்தரச் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 36 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்று காணப்பட்டது. ஒன்றுசேர்ந்த

அடிப்படையில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை 2020இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 64 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது.

- மேலும், அரசாங்கத்திற்கான நீண்ட காலக் கடன்கள் கணக்கின் பேரிலான தேறிய உட்பாய்ச்சல்கள் 2020 மேயில் ஐ.அ.டொலர் 313 மில்லியனாக விளங்கியமைக்கு ஐ.அ.டொலர் 333 மில்லியன் கொண்ட கூட்டுக் கடன்கள் மீள்கொடுப்பனவு செய்யப்பட்டமையே முக்கிய காரணமாகும்.

## பன்னாட்டு ஒதுக்குகள்

- 2020 மே இறுதியில் **மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்** ஐ.அ.டொலர் 6.5 பில்லியனாக விளங்கி 4.2 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 2020 மே இறுதியில் ஐ.அ.டொலர் 9.2 பில்லியனாக விளங்கி 6.0 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டது.

**வரைபடம் 10: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் ஒதுக்குப் போதுமை**




**மூலம்:** இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுச் செலாவணி வீத அசைவுகள்

- 2020 மே மாத காலப்பகுதியில் இலங்கை ரூபா குறிப்பிடத்தக்களவு உயர்வினைப் பதிவுசெய்தது. இப்பின்னணியில் 2020 மே 9ஆம் நாளன்று ஐ.அ.டொலருக்கெதிராக 9.1 சதவீதத்தினால் தேய்வடைந்த ரூபா அதன் பின்னர் உயர்வடைந்து 2020 யூலை 13ஆம் நாள் வரையான இவ்வாண்டுப் பகுதியில் ஒட்டுமொத்தமாக 2.3 சதவீதம் கொண்ட தேய்வினைப் பதிவுசெய்தது. குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2020 யூலை 13ஆம் நாள் வரையான இவ்வாண்டுப் பகுதியில் ரூபா, யூரோ, யப்பானிய யென் மற்றும் அவுஸ்திரேலிய டொலர் என்பனவற்றிற்கெதிராக தேய்வடைந்த வேளையில் ஸ்ரேர்லிங் பவுண், இந்தியன் ரூபா என்பனவற்றிற்கெதிராக உயர்வடைந்தது.

**வரைபடம் 11: ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




**மூலம்: இலங்கை மத்திய வங்கி**

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2018 | 2019 | (2020 யூலை 13 வரை) உயர்வு (+)/ தேய்வு (-) |
|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | -16.4% | +0.6% | -2.3% |
| யூரோ | -12.7% | +2.6% | -3.2% |
| ஸ்ரேர்லிங் பவுண் | -11.4% | -2.8% | +1.4% |
| யப்பானிய யென் | -18.1% | -1.0% | -3.9% |
| அவுஸ்திரேலிய டொலர் | -7.6% | +1.3% | -1.8% |
| இந்தியன் ரூபா | -8.7% | +2.6% | +3.0% |

**மூலம்: இலங்கை மத்திய வங்கி**